**செய்தி வெளியீடு எண்: 193** **நாள்: 07.03.2020**

**இ.ஜி.எஸ்.பிள்ளை கல்வி நிறுவனங்களின் சார்பில் நடைபெறும்**
**உலக மகளிர் தின விழாவில்**
**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள்**
**ஆற்றிய உரை – நாள் 7.3.2020**

**மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா தெய்வத்தை வணங்குகிறேன்.**

உலக மகளிர் தினம் நாளைய தினம் தான் கொண்டாடப்பட இருக்கிறது. இருந்தாலும் இந்த மாவட்டத்தினுடைய மண்ணின் மைந்தர் அண்ணன் திரு. ஓ.எஸ். மணியன் அவர்கள், இ.ஜி.எஸ். பிள்ளை கல்விக் குழுமத்தினுடைய வேண்டுகோளை ஏற்று. என்னிடத்திலே நாடி, இ.ஜி.எஸ். பிள்ளை கல்விக் குழுமம் சார்பாக மிகப் பெரிய கல்லூரியை நடத்திக் கொண்டு இருக்கிறார்கள், அந்தக் கல்லூரி நிகழ்ச்சியிலே கலந்து கொள்ள வேண்டும் என்று என்னை அணுகியபோது, இது பெண்களுக்காக நடத்தப்படுகின்ற ஒரு நல்ல நிகழ்ச்சி, இந்த நிகழ்ச்சியில் நான் கலந்து கொள்கிறேன் என்று அவரிடத்திலே தெரிவித்தேன். உங்களுடைய கல்வி குழுமத்தைச் சேர்ந்த செயலர் அவர்கள் நேரில் வந்து என்னை அணுகி அழைப்பிதழை கொடுத்தார். அவரது வேண்டுகோளுக்கிணங்க உங்கள் முன்பு நான் பேசிக் கொண்டு இருக்கின்றேன்.

உலக மகளிர் தின விழா, இன்றைக்கு நம்மை எல்லாம் ஈன்றெடுத்த தாயும், இங்கே அமர்ந்திருப்பவர்களும் பெண்கள். இந்த உன்னதமான நிகழ்ச்சியிலே நான் கலந்து கொள்வதிலே உண்மையிலே இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றியை செலுத்த கடமைப்பட்டு இருக்கிறேன்.

உலக மகளிர் தின விழா நிகழ்ச்சியிலே
வரவேற்புரை ஆற்றிய
இ.ஜி.எஸ்.பிள்ளை கல்விக் குழுமத்தின் செயலர்
**செவாலியர் முனைவர் எஸ்.பரமேஸ்வரன்** அவர்களே !

இந்த விழாவிலே
தலைமையுரை ஆற்றிய இந்த மண்ணின் மைந்தர்
மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்
**திரு. ஓ.எஸ்.மணியன்** அவர்களே !

இந்த நிகழ்ச்சியிலே முன்னிலை வகித்து கொண்டு இருக்கின்ற
இ.ஜி.எஸ்.பிள்ளை கல்விக் குழுமத்தின் தலைவர்
**திருமதி. ஜி.எஸ்.ஜோதிமணி அம்மாள்** அவர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டு இருக்கின்ற
மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே!
சட்டமன்ற உறுப்பினர்களே!

இந்த நிகழ்ச்சியிலே கலந்து கொண்டு சிறப்பித்துக் கொண்டு இருக்கின்ற
மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களே!
வருவாய் அலுவலர் அவர்களே!

முன்னாள் அமைச்சர் பெருமக்களே!
உள்ளாட்சி பிரதிநிதிகளே, கூட்டுறவு சங்க நிர்வாகிகளே,

மிக திரளாக குழுமி, இங்கே வரவேற்பு நிகழ்த்தி கொண்டு இருக்கின்ற
மாணவிகளே, பேராசிரியர் பெருமக்களே,
மற்றும் இந்த நிறுவனத்தில் அங்கம் வகிக்கின்ற நிர்வாகிகளே,
பத்திரிகை மற்றும் ஊடக நண்பர்களே !

நன்றியுரை ஆற்ற இருக்கின்ற இந்த கல்லூரியின்
துணை முதல்வர் முனைவர் எஸ். கற்பகம் அவர்களே,

உங்கள் அனைவருக்கும் பணிவான வணக்கத்தை தெரிவித்துக்
கொள்கிறேன்.

‘‘**மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம்**
**செய்திட வேண்டுமம்மா’’ -** என்று
கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்கள்
பெண்ணின் சிறப்பை பெருமையாக எடுத்துரைக்கிறார்.

இத்தகு பெண்களின் சிறப்பினை
உலகிற்கு பறைசாற்றும் வகையில்
ஒவ்வொரு ஆண்டும் மார்ச் திங்கள் **8–**ஆம் நாள்
‘‘**சர்வதேச மகளிர் தினமாக**’’ கொண்டாடப்படுகிறது.
நாளை கொண்டாட உள்ள இந்த உலக மகளிர் தினத்திற்கு,
அனைத்து மகளிருக்கும் எனது உளம் கனிந்த மகளிர் தின
நல்வாழ்த்துகளை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

நாளை சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்படும் நிலையில், இன்று
உங்கள் மத்தியில் உரையாடுவதில்
நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

பெண்கள் இந்நாட்டின் கண்கள்.
இந்நாட்டின் எதிர்காலமே
பெண்கள் கைகளில் தான் உள்ளது.

இந்தியாவில் ஓடும் அனைத்து நதிகளுக்கும் பெண்களின் பெயர் தான் வைக்கப்பட்டுள்ளது. அந்த அளவிற்கு பெண்களுக்கு பெருமை இருக்கின்றது.

குடகிலே தோன்றி, தவழ்ந்து ஓடி வந்து டெல்டா பகுதியாக இருக்கின்ற நாகப்பட்டினத்தில் பாய்க்கின்ற நீர் கூட காவேரி தாய் கொடுக்கின்ற நீர் தான் இந்த மண்ணிலே பாய்கின்றது.

இன்றைய தினம் ஆண்களுக்கு நிகராக
பெண்களும் கல்வி பயின்று
பல்வேறு உயர் பதவிகளை வகித்து வருகின்றனர்.

ஒரு ஆண் மகன் கல்வி கற்றால் அது அவனுக்கும்,
அவனது குடும்பத்திற்கும் மட்டுமே பயனுள்ளதாக இருக்கும்.

ஆனால் பெண்களின் கல்வி
அவர்களது குடும்பத்திற்கு மட்டுமன்றி
இந்த சமூகத்திற்கே பயனுள்ளதாக அமைகிறது.

எனவே, தான் மாண்புமிகு அம்மா அவர்கள்
பெண் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளித்தார்கள்.
பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு
விலையில்லா பாடப் புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகங்கள்,
விலையில்லா சீருடைகள்,
விலையில்லா மிதி வண்டிகள்
போன்ற அத்தனையும் வழங்கிய ஆட்சி அம்மாவுடைய ஆட்சி.

அதுமட்டுமல்ல, பெண்கள் திருமண வயதை அடைகின்ற போது, பொருளாதார சூழ்நிலையின் காரணமாக திருமணம் தடைபடுகின்ற நிலையை மாற்றி, மாண்புமிகு அம்மா அவர்கள் ஏழையாக இருந்தாலும், உரிய காலத்திலே பெண்களுக்கு திருமணம் நடைபெற வேண்டும் என்ற எண்ணத்தின் அடிப்படையிலே, ரூ.25,000/–, ரூ.50,000/– வழங்கி, 8 கிராம் தாலிக்கு தங்கம் வழங்குகின்ற அரசு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மாவுடைய அரசு.

கர்ப்பிணி தாய்மார்களுக்கு வளைகாப்பு நடத்தப்படுவதோடு, டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதியுதவி திட்டத்தின் கீழ், இதுவரை 21.5 லட்சம் கர்ப்பிணி தாய்மார்களுக்கு 2050 கோடி ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டு இருக்கிறது. அதுபோல, அம்மா தாய்சேய் நல பரிசு பெட்டகம் வழங்கும் திட்டத்தை 4.3.2019 அன்று நான் துவக்கி வைத்தேன். அதேபோல பிறந்த குழந்தை, நலமோடு, வளமோடு, சிறப்போடு வாழ வேண்டும் என்பதற்காக அம்மா குழந்தை நல பரிசு பெட்டகம் 13.25 லட்சம் பேர்களுக்கு இன்றைக்கு அம்மாவுடைய அரசு கொடுத்திருக்கிறது. அதற்காக 178 கோடி ரூபாய் நிதியுதவி அளிக்கப்பட்டு இருக்கிறது.

அதேபோல, இங்கே இருக்கின்ற சகோதரிகள் வேலைக்கு செல்கின்ற போது, அவர்கள் உரிய நேரத்திலே வேலைக்கு செல்ல வேண்டும். ஆகவே அதற்கு அரசு துணை நிற்பதற்காக உழைக்கும் மகளிருக்கு அம்மா இருசக்கர வாகனம் மானிய விலையிலே அம்மாவுடைய அரசு கொடுக்கிறது. இதற்காக ரூ.25,000 மானியம் கொடுக்கப்படுகிறது. இதுவரை 1,70,025 பேர் இந்த திட்டத்தின் வாயிலாக நிதியுதவி பெற்றிருக்கின்றார்கள். அரசு மானியமாக 394 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டு இருக்கிறது என்பதை பெருமையோடு இந்த நேரத்திலே குறிப்பிட விரும்புகின்றேன். மகளிர் சுயஉதவிக் குழுக்களுக்கு அதிக அளவு நிதியுதவி செய்த அரசு அம்மாவுடைய அரசு. அதற்கு தேவையான மானியத்தை கொடுத்து, பெண்கள் சொந்த காலிலே நின்று, உழைத்து, பொருளாதார மேம்பாடு அடைய வேண்டும் என்ற உயரிய நோக்கில் இந்த உன்னத திட்டத்தை கொண்டு வந்தவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

அதேபோல கிராமப்புற பெண்களின் பொருளாதார முன்னேற்றத்திற்காக விலையில்லா கறவை மாடுகள், வெள்ளாடுகளை வழங்கினார்கள்.

பெண்களின் பாதுகாப்பினை உறுதி செய்யும் வகையில்,
பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்,
பொது இடங்களில் அதிக அளவில்
**சிசிடிவி கேமராக்கள் நிறுவுதல்,**
**அனைத்து மகளிர் காவல் நிலையங்களை ஏற்படுத்துதல்,**
**பெண்களுக்கு எதிரான குற்றங்களை தடுக்க**
**13 அம்ச திட்டத்தை செயல்படுத்துதல்,**
24 மணி நேரமும் அவசர கால அழைப்பை ஏற்கும் வகையில்,
**மகளிருக்கான உதவி எண் 181** செயல்படுத்துதல்,
32 மாவட்டங்களிலும்

**ஒருங்கிணைந்த சேவை மையம்** துவக்கப்பட்டு
24 மணி நேர சேவை
என்ற அம்மா அரசின் முன்னேச்சரிக்கை நடவடிக்கைகளின் விளைவாக
இன்று பெண்கள் பாதுகாப்பாக வாழக்கூடிய
மாநிலங்களில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாக இன்றைக்கு திகழ்ந்து கொண்டு இருக்கிறது.

மேலும், இந்தியாவிலேயே பெண்கள் பாதுகாப்பாக வாழ்வதற்கான நகரங்களில் கோவை முதலிடம், பெருநகரங்களில் சென்னை முதலிடம் பெற்றுள்ளது. எல்லாவற்றிற்கும் மேலாக, பெண் சிசுக்கொலையை தடுத்திட மாண்புமிகு அம்மா அவர்கள் கொண்டு வந்த தொட்டில் குழந்தை திட்டம், அன்னை தெரசா அவர்களால் பாராட்டப்பட்ட ஒரு முத்தான திட்டமாகும்.

குழந்தைகளுக்காக குறிப்பாக பெண் குழந்தைகளுக்காக மாண்புமிகு அம்மா அவர்கள் ஆற்றிய உயர்ந்த சேவையினை நினைவு கூரும் வகையில் அம்மா அவர்களின் பிறந்த நாளான பிப்ரவரி 24–ந் தேதியை மாநில பெண் குழந்தைகள் பாதுகாப்பு நாளாக எங்களுடைய அரசு அறிவித்திருக்கிறது.

அம்மா அவர்களின் நினைவினை சிறப்பிக்கும் வகையில் ஆதரவற்ற பெண் குழந்தைகளின் நல்வாழ்விற்காக 5 புதிய திட்டங்களை அறிவித்துள்ளோம் என்பதனை இந்த நேரத்தில் மகிழ்ச்சியுடன் தெரிவிக்க விரும்புகின்றேன்.

1) அரசு இல்லங்களில் வாழும், பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் இல்லாத குழந்தைகள், **21 வயதை நிறைவு செய்யும்போது, அவர்களுக்கு தலா இரண்டு லட்சம் ரூபாய் வீதம் அவர்களது பெயரில் வங்கியில் செலுத்தப்படும்.** அரசு இல்லங்களை விட்டு வெளியேறும் குழந்தைகள்,

சமுதாயத்தில் தங்கள் வாழ்க்கையை நிறைவாக அமைத்துக் கொள்ள இத்தொகை ஏதுவாக அமையும்.

2) பெற்றோர் மற்றும் பாதுகாவலர் இல்லாத பெண் குழந்தைகள், 18 வயது முடிந்து, அரசு குழந்தைகள் இல்லத்திலிருந்து வெளியே சென்ற பின்னர், அவர்களின் பாதுகாப்பு மற்றும் பொருளாதார நிலைக்கு பாதிப்பு ஏற்படுமானால், மாண்புமிகு அம்மாவின் அரசு, தாய் தந்தை நிலையிலிருந்து **அவர்களின் சமூக, பொருளாதார பாதுகாப்பை உறுதி செய்ய ஒரு சிறப்பு உதவித் தொகுப்பினை வழங்கும். இந்த உதவித் தொகுப்பில் மேற்கல்வி பயிலுதல், திறன் மேம்பாட்டு பயிற்சி, வேலைவாய்ப்பு, சுய தொழில் செய்தல் போன்றவை மேற்கொள்ளலாம்.**

3) பராமரிப்பு இல்லங்களில் ஆதரவற்ற மற்றும் முற்றிலும் கைவிடப்பட்ட குழந்தைகளை சிறந்த முறையில் வளர்க்கும் வளர்ப்பு பெற்றோர்களுக்கு தற்போது 3 ஆண்டுகளுக்கு மாதம் ஒன்றுக்கு **2,000 ரூபாய் வீதம் வழங்கப்படுகிறது. இத்தொகை, மாதம் 4,000 ரூபாயாக உயர்த்தி 5 ஆண்டுகளுக்கு வளர்ப்பு பெற்றோர்களுக்கு வழங்கப்படும்.**

4) **குழந்தைகளின் பாலின விகிதத்தை உயர்த்துவதற்காக சிறப்பாக செயலாற்றும் மூன்று மாவட்ட நிர்வாகங்களுக்கு முதல் மூன்று பரிசுகளாக தங்கம், வெள்ளி, வெண்கலப் பதக்கங்களும், சான்றிதழும் வழங்கப்படும்.**

5) சமூக பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் குழந்தைகள் இல்லங்கள், கூர்நோக்கு இல்லங்கள், சிறப்பு இல்லங்கள், பிற்காப்பு இல்லங்கள் மற்றும் மகளிர் காப்பகங்களில் உள்ள இல்லவாசிகளுக்கும், காப்பகங்களில் இருந்து பயிற்சி முடித்து வெளியேறிய இல்லவாசிகளுக்கும், சமூக பாதுகாப்புத் துறையில் 'C' மற்றும் 'D' பிரிவில் ஏற்படும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் எல்லைக்கு உட்படாத காலிப் பணியிடங்களில் பணியமர்த்த தற்போது அரசாணை உள்ளது.

அனைத்து குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் உள்ள, முற்றிலும் ஆதரவற்ற மற்றும் கைவிடப்பட்ட குழந்தைகள், சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறையின் கீழ் இயங்கும், சமூக நலத் துறை, சமூக பாதுகாப்புத் துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவலகங்களில் ஏற்படும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் எல்லைக்கு உட்படாத ‘C’ மற்றும் ‘D’ பிரிவு பணியிடங்களில், வயது, கல்வி மற்றும் பிற தகுதிகளுக்கு ஏற்ப, முன்னுரிமை அடிப்படையில் பணியமர்த்தப்படுவர்.

மேலும், சத்துணவு திட்டம் மற்றும் அங்கன்வாடி மையங்களில் உள்ள பணியிடங்களிலும், தகுதிக்கு ஏற்ப, முன்னுரிமை அடிப்படையில் பணியமர்த்தப்படுவர் என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011 தேர்தல் அறிக்கையிலே இல்லத்தரசிகளின் வேலைப் பளுவைக் குறைத்து அவர்கள் பயன்பெறும் வகையில் விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின் விசிறி வழங்கப்படும் என்று தெரிவித்தார்கள். தேர்தலில் வெற்றி பெற்று, முதலமைச்சராக பொறுப்பேற்றவுடன் மாண்புமிகு அம்மா அவர்கள் விலையில்லா மிக்சி, கிரைண்டர், மின் விசிறி அனைத்து குடும்ப அட்டைதாரர்களுக்கும் வழங்கினார்கள். இன்றைக்கு இந்தியாவிலேயே அனைத்து குடும்பத்திற்கும் இந்த விலையில்லா பொருட்களை கொடுத்த அரசு அம்மாவுடைய அரசு. எந்த மாநிலத்திலும் இப்படிப்பட்ட திட்டத்தை நடைமுறைப்படுத்திய வரலாறு கிடையாது. இந்த வரலாற்றை படைத்தது இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

**“பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும்**
**பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்**
**ஏட்டு மறிவினில் ஆணுக் கிங்கே பெண்**
**இளைப்பில்லை காணென்று கும்மியடி**

என்று மகாகவி பாரதியார் அவர்கள்
பெண் விடுதலையைப் பற்றி பாடியுள்ளார்.

தமிழ்நாட்டில் படிக்காத பெண்களே இல்லை
என்று சொல்லும் அளவுக்கு
இன்று பெண்கள் சுதந்திரமாக வெளிவந்து
பள்ளி, கல்லூரிகளில் படித்து சாதனை புரிந்து வருகிறார்கள்.
இன்று ராணுவம் உட்பட அனைத்து துறைகளிலும்
பெண்களின் பங்களிப்பு ஆண்களுக்கு இணையாக உள்ளது
என்பதை பெருமையுடன் இந்த நிகழ்ச்சியின் வாயிலாக தெரிவித்துக் கொள்கிறேன்.

**ஆண்களோடு பெண்கள் சரிநிகர் சமமாக**
**உயர வேண்டுமானால் அவர்கள் பொருளாதார ரீதியில் அதிகாரம் பெற்று**
**தமது சொந்தக் காலில் நிற்க வலிமையையும், தன்னம்பிக்கையையும்**
**பெறவேண்டும்,**

என்றார் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

மாணவிகள் படிக்கும்போது,
அவர்கள் கவனம் முழுவதும் படிப்பில்தான் இருக்க வேண்டும்.
உங்களது பெற்றோர்கள் உங்கள் வாழ்வு சிறக்க
பல கனவுகள் காண்கின்றனர்.
அவர்களின் கனவை நனவாக்க நீங்கள் பாடுபட வேண்டும்.
உங்களுக்கு சமுதாய பொறுப்பு இருக்கிறது.
உங்களை வளர்த்து விட்ட நிறுவனத்திற்கும்,
உங்கள் மாநிலத்திற்கும், தேசத்திற்கும்
உங்கள் பங்களிப்பு இருக்க வேண்டும்.

**நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்**
**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்**

பெண்களுக்கு இருக்க வேண்டும்
என்றார் மகாகவி பாரதியார் அவர்கள்.

அவரது கூற்றுக்கு ஏற்ப,
நீங்கள் தைரியத்துடனும், தன்னம்பிக்கையுடனும்,
விவேகத்துடனும் உங்களுக்கு கிடைத்த உரிமைகளை
நல்ல முறையிலேயே உபயோகப்படுத்த வேண்டும்.

வண்டியில் பூட்டிய இரண்டு மாடுகளும்
இணைந்து பயணித்தால்தான்,
வண்டி குறித்த நேரத்தில்
தான் செல்ல வேண்டிய இடத்தை சென்றடைய முடியும்.
அதே போல், வீட்டிலுயும், நாட்டிலும்,
ஆணும், பெண்ணும் ஒருவரை புரிந்து கொண்டு,
விட்டுக் கொடுத்து செயல்பட்டால்,
வீடும், நாடும் அமைதியாகவும், வளமாகவும் இருக்கும்
என்று கூறி,

இந்த அற்புதமான நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நல்ல வாய்ப்பினை உருவாக்கி தந்தமைக்கு நன்றியை தெரிவித்து, அதோடு, இங்கே மேடையிலே இரண்டு சிறுமிகள் அழகாக பாடலை பாடினார்கள், அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இ.ஜி.எஸ். பிள்ளை கல்வி நிறுவனம், மேலும் மேலும் வளர்ந்து இந்த பகுதியில் இருக்கின்ற மாணவர்களுக்கும், மாணவிகளுக்கும் நல்ல கல்வியை கொடுத்து அவர்களுடைய வாழ்க்கையில் உயர்ந்த இடத்திற்கும், உன்னத நிலையை அடைவதற்கும் வழிகோலாக, அடித்தளமாக விளங்க வேண்டும் என்று வாழ்த்துகிறேன். இந்த கல்வி நிறுவனத்தில் சுமார் 9000 மாணவ, மாணவிகள் கல்வி பயில்வதாக சொன்னார்கள். 9000 மாணாக்கர்களுடைய இல்லங்களில் ஒளியேற்றுகின்ற இந்த நிறுவனத்திற்கு எனது வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை தெரிவித்து, விடை பெறுகிறேன்.

நன்றி, வணக்கம்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**